

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தாயனூர் ஊராட்சியில் ரூ 3.12 கோடி மதிப்பீட்டில் வேலந்தாங்கல் தாயனூர் வழியாக ஆத்திப்பட்டு சாலையை அகலப்படுத்தி புதியதார்சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன்மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர் அக்பர் அலி,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா ராஜேஷ் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை பார்வையிட்டு பயனாளிகளுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நகராட்சி தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், துணை தலைவர் பவளக்கொடி சரவணன், ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி சத்தியநாதன் துணை தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார் மற்றும் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் சரவணன் ,நகர செயலாளர் ஏ.வி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக நாளை - தி.மு.க. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்

# ராணிப்பேட்டை மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, நவ. 10 -

இராணிப்பேடை மாவட்டச் செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல் துறைஅமைச்சர்ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டில் சிறப்பு தீவிரவாக்காளர்பட்டியல் சீராய்வு (S.I.R.)கொண்டு வந்துள்ளஇந்தியத்தேர்தல் ஆணையத்தைக்கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை (11.11.2025) அனைத்து மாவட்டத்தலைநகரங்களிலும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும். இந்திய தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.)கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர்வாக்காளர்கள்,பட்டியல் இன மக்கள் வாக்குகள், மற்றும் பா.ஜ.க.வின்எதிர்ப்புவாக்குகள் ஆகியவற்றைக் குறி வைத்து நீக்கும் நோக்கத்தோடு தகுதியுள்ள வாக்காளர்களைநீக்கி,தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்கு பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்பதோடு,பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல்தமிழ்நாடுஉள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R. திட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) வின். மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப்பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

எனவே, இந்த S.I.R. சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க அரசின் கைபாவையாகமாறிஎதேச்சதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம்,

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து “மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ”சார்பில் நாளை (11.11.2025 -செவ்வாய்க் கிழமை), காலை 10.00 மணிக்கு இராணிப் பேட்டை, முத்துக் கடை அருகில்“ மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம்”நடைபெறும். இந்த கண்டன ஆர்ப்பாட்டம்

தி.மு.கமாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர்

வினோத் காந்தி தலைமையிலும் மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற கட்சி துணைத் தலைவர் ஏ.எம். முனிரத்தினம் எம்.எல்.ஏ., காங்கிரஸ் தலைவர் சி.பஞ்சாட்சரம், ம.தி.மு.க - மாவட்டச் செயலாளர் பி.என்.உதயகுமார்இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் - மாவட்டச்செயலாளர்ரகுபதி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் மணிகண்டன் இந்திய கம்யூனிஸ்ட் - மாவட்டச் செயலாளர் சங்கர்மேஸ்திரி , இந்திய யூனியன் முஸ்லிம்லீக் - மாவட்டச் செயலாளர் மலக்முஹமத் காலித் , விடுதலை சிறுத்தைகள் கட்சி இராணிபேட்டை மத்திய மாவட்டச் செயலாளர் ரமேஷ்கர்ணா , இராணிபேட்டை மேற்கு மாவட்டச்செயலாளர்பிரபு,இராணிபேட்டை கிழக்கு மாவட்டச் செயலாளர் செல்வீரபா இளையநிலா ,

மண்டல துணை செயலாளர்சோ.தமிழ்,திராவிட கழகமாவட்ட செயலாளர் செ. கோபி தலைமைச் செயற்குழு உறுப்பினர் பு. எல்லப்பன்

மக்கள் நீதிமய்யம் கட்சியின்மாவட்டச்செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி,மனிதநேயமக்கள்கட்சியின்மாவட்டச் செயலாளர் இம்ரான், தமிழகவாழ்வுரிமை கட்சியின்மாவட்டச் செயலாளர் விஸ்வநாதன் , ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள், சட்டமன்றநாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டநிர்வாகிகள்,நகர, ஒன்றிய,பேரூர்கழகநிர்வாகிகள்,கழகத் தோழர்கள், மற்றும்உள்ளாட்சிமன்றத்தின்பிரதிநிதிகள்,அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டு வெற்றிபெறசெய்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறுஅவர்தெரிவித்துள்ளார்.



விளாத்திகுளம் வட்டம், சிவஞானபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.50லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கலையரங்க கட்டிடப் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இம்மானுவேல், நவநீதக்கண்ணன், தேர்தல் பொறுப்பாளர் சங்கர்ராம் ஆசிரியர்கள் விவேகானந்தன், கந்தசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்
### நவம்பர் 10 (1988)



கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி அவர்களோடு இணைந்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தென்காசியில் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி, நவ. 10 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்களின் ஆணைப்படி தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (11.11.2025 -செவ்வாய்க் கிழமை) காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.





அதில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் ஆணைப்படி தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து ஒருங்கிணைத்த மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் நடைபெற உள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தென்காசி, கடையநல்லூர்,வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, கழகச் செயலாளர்கள்,நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் அணி அமைப்பாளர் கள்,துணை அமைப்பாளர்கள் (,BLA -2)

(BDA) (BLC) கழகத் தோழர்கள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தவறாது கலந்து கொண்டு மாபெரும் கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# நெய்வேலியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம்!

## சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கடலூர், நவ. 10 -

கடலூர் மேற்கு மாவட்டம்,நெய்வேலி சட்டமன்ற தொகுதி, குறி ஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் வடக்கு மேலூர் ஊராட்சியில் மக்கள் குறைகளை அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் திசபா.இராசேந்திரன் தொடங்கி வைத்தார்.

வடக்கு மேலூர், வானதிராயபுரம் ஊராட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத்தொகை, இலவச மனைப் பட்டா, மின்சார இணைப்பு, மாற்றுத்திறனாளி நலவாரிய அட்டை, மருத்துவ காப்பீட்டு அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்தனர். பொதுப் பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மைத் துறை, தொழிலாளர் நலத் துறை உள்ளிட்ட 15 துறைகளைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் பங்கேற்று 45 வகையான கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

முகாமில் சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் அவர்கள், கீழூர், வாணிதராயபுரம், வடக்குத்து புலியூர், கோரணப்பட்டு ஊராட்சிகளைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்களுக்கு குப்பை ஏற்றும் மூன்று சக்கர மின்சார வாகனம் வழங்கினார். மேலும், கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், மருத்துவப் பயனாளர்களுக்கு மருந்து பெட்டகமும் வழங்கினார்.

வட்டாட்சியர் விஜய் ஆனந்த், BDO கள் ராமச்சந்திரன், வெங்கடேசன், மருத்துவர்கள் டாக்டர் பாலச்சந்தர், டாக்டர் ராமநாதன், SSS வட்டாட்சியர் ராமர், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், அவைதலைவர் வீர.ராமச்சந்திரன், ஒன்றியப் பொருளாளர் ஆனந்த ஜோதி, மாவட்டப் பிரதிநிதி ராம வெங்கடேசன், வி.டி. கோவிந்தராஜ், ஜி. கோ கோவிந்தராஜ், ஜி. குணசேகரன், துரை ரமேஷ், சீனிவாசன், சேகர், கோபாலகிருஷ்ணன், மணி, வர்மா, மாயகிருஷ்ணன், ஐயப்பன், கோவிந்தன், ராஜேஷ், ராஜ்கமல், பிரம்மன், வாணி ஜராயபுரம் நிர்வாகிகள் காசிநாதன், கணேசன், மணிவேல், கண்ணுசாமி, சின்னத்தம்பி, உதயசூரியன், முருகன், ராஜீவ், நடராஜன், மணிகண்டன், ஊராட்சி செயலாளர்கள் முத்துக்குமார், பழனி வேல், கிராம நிர்வாக அலுவலர்கள் கோபாலகிருஷ்ணன், முருகன் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், காவல்துறையினர், தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி படேதலாவ் ஏரியில் இருந்து

# 13 ஏரிகளுக்குச் செல்லும் கால்வாய்களை தூர்வாரும் பணி!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, நவ.9-

கிருஷ்ணகிரி அடுத்த காட்டிநாயனப்பள்ளி ஊராட்சியில் சுமார் 163 ஏக்கர் பரப்பளவில் படேதலாவ் ஏரி அமைந்துள்ளது. இந்த படேதலாவ் ஏரி 50 சதவீதம் நிரம்பியதால் ஏரியில் இருந்து பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 13 ஏரிகளுக்கு நீர் செல்லும் கால்வாய்களை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் திணேஷ் குமார், ஆகியோர் படேதலாவ் ஏரியில் தூர்வாரும் பணியை துவக்கி வைத்தனர்.

இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் கூறும் போது,

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சிறப்பாக பெய்ததால் அந்த மழை நீரை ஏரிகளில் நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது பல்வேறு இடங்களில் சி எஸ் ஆர் நிதியின் மூலம் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு ஏரிகள் நிரப்பப்பட்டு வருகிறது. பாலேகுளி முதல் சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளை நிரப்புவதற்கு சிஎஸ்ஆர் நிதி மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக படேதலாவ் ஏரிக்கு வரக்கூடிய நீரை 13 ஏரிகளில் நிரப்புவதற்காக 18 கிலோ மீட்டர் தூரம் உள்ள கால்வாய்களை சி எஸ் ஆர் மூலம் தூர்வாரும் பணி துவங்கப்பட்டுள்ளது.

இதில் கிரேன், ஹிட்டாச்சி, மினி ஜேசிபி உள்ளிட்ட 15 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு தூர்வாரப்பட்டு வருகிறது. தடதடா ஆறு, நாச்சிகுப்பம் ஆறு, மார்க்கண்டேயன் நதி மூலம் மாரசந்திரம் அணைக்கு நீர் வந்து படேதலாவ் ஏரி நிரம்புகிறது.

மேலும் ஒரு 40 மில்லியன் கன அடி நீர் ஏரிக்கு வந்தால் அதிலிருந்து தண்ணீர் வெளியேறி 13 ஏரிகளுக்கு செல்லும். இந்த கால்வாய் தூர்வாரும் பணி இரண்டு வாரங்களில் முடிவடையும் என்றார். மேலும் எண்ணே கொள்புதூர் கால்வாய் பணிகள் அடுத்த ஆண்டு வட கிழக்கு பருவமழைக்குள் பணிகள் முடிவடைந்து தென்பெண்ணை ஆற்று நீர் படேதலாவ் ஏரிக்கு கொண்டு வரப்படும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குரள், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, தலை மைச் செயற்குழு உறுப்பினர் செந்தில், மாவ ட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,பேரிலோவன்பட்டியில் உபரி நிதியில் ரூ.24.75 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டுவதற்கான பணியை, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் துவக்கி வைத்தார்.நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, ஒன்றிய உதவி பொறியாளர் செல்வம், தொழிலதிபர் செல்வகுமார், விளாத்திகுளம் மத்திய ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர் சீத்தாராமன், மாவட்ட பிரதிநிதி முனியசாமி, உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.